[2014 டிசம்பர் 5

24—

சமுதாய நலக் கூடம்

***35143—திரு. என். முருகுமாறன்:**

மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காட்டுமன்னார்கோவில் தொகுதி, குமராட்சி ஊராட்சி ஒன்றியம், சி. அரசூர் ஊராட்சியில் ஆதி திராவிடர் நலத் துறையின் மூலமாக சமுதாய நலக் கூடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன். மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பாதம் பணிந்து வணங்கி கேள்விக்கான பதிலை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவில் சட்டமன்றத் தொகுதி, குமராட்சி ஒன்றியம், சி.அரசூர் ஊராட்சியில் விதிகளுக்குட்பட்டு, நிதிநிலைக்கேற்ப மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்பேரில் நடக்கின்ற அரசு, சமுதாய நலக் கூடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன் அவர்கள்.*

முற்பகல் 10—55

திரு. என். முருகுமாறன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒடுக்கப்பட்ட மக்களின் ஒரே போர்வாள், தமிழக மக்களின் சீர்மிகு கூர்வேல், முல்லைப் பெரியாறை மீட்டுத்தந்த வெற்றித் திருமகள், காவேரியைக் காத்து காவியம் படைத்த*

2014 டிசம்பர் 5]

கலைமகள், பொன்னியின் செல்வி, பொன்மனத் தலைவி, வாழும் வீரமங்கை வேலுநாச்சியார், மாண்புகள் நிறைந்த மக்கள் முதல்வர், வாஞ்சைமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொன்மலர்ப் பாதங்களைப் பணிவோடும், நன்றியோடும் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவில் தொகுதி, குமராட்சி ஒன்றியத்தில் அமைந்துள்ள சி.அரசூர் ஊராட்சி கொள்ளிடக் கரையின் கடைக்கோடியில் அமைந்திருக்கக்கூடிய ஊராட்சி. ஒடுக்கப்பட்ட மக்கள் அதிகமாக வசிக்கின்ற ஊராட்சியாக, கொள்ளிடக் கரையில் அமைந்திருக்கின்ற ஊராட்சியாக இருக்கின்ற காரணத்தாலும், அவ்வூராட்சியைச் சுற்றி ஆதி திராவிட மக்கள் அதிகமாக இருக்கின்ற காரணத்தினாலும், ஆதி திராவிட மக்களுடைய பேராலயமாக விளங்குகின்ற மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில் (மேசையைத் தட்டும் ஒலி) சி.அரசூர் ஊராட்சியில் இவ்வாண்டு சமுதாய நலக் கூடம் அமைத்துத் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களிடமிருந்து அவரவர் தொகுதிக்குட்பட்ட இடங்களில் சமுதாய நலக் கூடங்கள் கட்டிக் கொடுக்க வேண்டுமென அதிகப்படியான கோரிக்கைகள் வந்தவண்ணம் உள்ளன. இருப்பினும், மாமன்ற உறுப்பினர் அவர்கள் குறிப்பிடும் கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவில் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட குமராட்சி ஒன்றியத்திலுள்ள சி.அரசூர் ஊராட்சியின் மொத்த மக்கள்தொகையான 1,046–ல் 757 பேர் ஆதி திராவிடர் ஆவர். எனவே, அவ்விடத்தின் முக்கியத்துவம் மற்றும் நிதிநிலைமைக்கேற்ப சமுதாய நலக்கூடம் கட்டித் தர மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி நடைபெற்றுவரும் அரசினால் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன் அவர்கள்.

திரு. என். முருகுமாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களின் முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரிய ஆலோசனையைப் பெற்று, அங்கே சமுதாய நலக் கூடம் அமைத்துத் தரப்படும் என்று நல் ஆலோசனை வழங்கி, சிறப்பு சேர்த்திருக்கிற, மாண்புமிகு அம்மா அவர்களுடைய பெருமையைக் காக்கின்ற மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அம்மா அவர்களுக்கும் நெஞ்சம் நிறைந்த நன்றியினைத் தெரிவித்து, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 25, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு, மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

25—

மீனவர்களுக்கு வீடுகள்

***36234—திரு. ப. டில்லி பாபு:**

மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம், ஊட்டமலை, ஒகேனக்கல் பகுதிகளிலுள்ள உள்நாட்டு மீனவர்களுக்கு வீடுகள் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால், மீன் வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன். எல்லாரும் எல்லாமும் பெற வேண்டும், தமிழ்நாட்டில் இல்லாமை இல்லாத நிலை வேண்டும் என்று தமிழக மக்களுடைய வாழ்வுக்காக உழைத்துக் கொண்டிருக்கின்ற மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம், ஊட்டமலை மற்றும் ஒகேனக்கல் பகுதிகளிலுள்ள மீனவர்களில்